20.11.2024
OS. No.97/2023
**பி.வா.சா.1 –** திரு.ஜீவானந்து த/பெ.ராஜேந்திரன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):–**

நான் பிரதிவாதி திருக்கோவிலில் கடந்த 07.02.2023 முதல் செயல் அலுவலராக பணியில் இருக்கிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நான் தான் தாக்கல் செய்தேன்.அதில் நான் தான் கையொப்பம் செய்தேன். நான் எதிர்வழக்குரையை முந்தைய ஆவணங்களை பார்வையிட்டு திருக்கோவில் ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்தேன். வாதி தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை புரிந்து கொண்டு தான் எங்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம். வாதி எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்று தெரியவில்லை. வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.58/1977 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண்.455/1978 ஆகியவற்றின் தீர்ப்புரைகளை நான் படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்த்தேன். தீர்ப்பாணைகள் (Decree) இணைக்கப்படவில்லை. எனவே தீர்ப்பாணைகளை நான் பார்க்கவில்லை. வாதி தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் தான் நான் அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தீர்ப்பு விபரங்களை தெரிந்து கொண்டேன். அந்தத் தீர்ப்புரைகளின் சான்றிட்ட நகல் பெற்று அதில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்று நான் படித்துப் பார்க்கவில்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் வாசிக்கத் தெரியும். புலமை கிடையாது. வா.சா.ஆ.1 ல் செல்லாண்டியம்மன் திருக்கோவிலின் அப்போதைய செயல் அலுவலர் வாதி என்று கண்டுள்ளது. அதில் கண்டுள்ள வைத்தியநாதன் என்பவர்

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வாதியாகிய சண்முகம் என்பவரின் தகப்பனார் என்பது திருக்கோவிலின் ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு தெரிய வந்தது. அசல் வழக்கு எண் 58/1977 ல் முந்தைய செயல் அலுவலர் தாக்கல் செய்த வழக்கில் வைத்தியநாதன் பிரதிவாதி என்று காட்டப்பட்டு இருக்கிறது. உறையூரில் அமைந்திருக்கக் கூடிய செல்லாண்டியம்மன் திருக்கோவில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் எந்த வருடம் வந்தது என்றால் ஆவணங்களை பார்த்து தான் என்னால் சொல்ல இயலும். வா.சா.ஆ.1 ஆகிய தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தை கணக்கிட்டுப் பார்த்தால் 1977 ஆம் வருடத்திற்கு முன்பாகவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அந்த திருக்கோவில் வந்து இருக்கிறது என்று அறிய முடியும். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.2253/1 புதிய டவுன் சர்வே எண்.3 ஆகும். அசல் வழக்கு எண் 58/1977 ஐ முந்தைய செயல் அலுவலர் என்ன பரிகாரம் கேட்டு அந்த வழக்கை தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. முந்தைய வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முந்தைய செயல் அலுவலர் தாக்கல் செய்த மேல் முறையீடு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை பக்கம் 20 பத்தி 12 ல் வாதியின் தகப்பனார் வாதி திருக்கோவிலின் அளவுகளை குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரையில் பக்கம் 28 ல் செல்லாண்டியம்மன் கோவிலில் வாடகைதாரர் என்பதை காட்டுவதற்கு வாடகை ஒப்பந்தம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரையில் வாதியின் தகப்பனார் வாடகைதாரர் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை

www

என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் செல்லாண்டி அம்மன் கோவிலுக்கு அந்த வழக்கில் கண்ட சொத்தில் உரிமை மூலம் இல்லை என்று முடிவாகி இருக்கிறது என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் வைத்தியநாதனுக்கும் அவரது முன்னோர்களுக்கும் அந்த வழக்கில் கண்ட சொத்தில் உரிமை இருப்பதாக முடிவாகி இருக்கிறது என்றால் சரியல்ல. முந்தைய வழக்கில் கிழமேலாக 38 அடியும் தென்வடலாக 25 அடியும் அளவுகள் காட்டப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் அந்த வழக்கில் தனக்கு 11774 சதுர அடி அனுபவ பாத்தியம் இருப்பதாக கட்சி செய்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் வாதியின் தகப்பனார் அனுபவ பாத்தியம் மூலம் தனக்கு உரிமை இருப்பதாக சொன்ன பரப்பளவை பொறுத்து தனியாக உரிமையியல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 தீர்ப்புரையின் பேரில் இரண்டாவது மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் தான் வாதி தற்போது தற்போதைய வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சொத்து வரி ரசீதை நான் பார்க்கவில்லை. வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீதையும் நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்திற்கு வாதி சொத்து வரி, தண்ணீர் வரி மற்றும் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. சில வாடகைதாரர்கள் செல்லாண்டி அம்மன் கோவிலுக்கு நேரடியாக வாடகை செலுத்தி வருகிறார்கள் என்று கூறி இருக்கிறேன். தொடர்பான ஆவணங்கள் கைவசம் இருக்கிறது தாக்கல் செய்ய முடியும். நான் சொல்வது போல் எந்த ஆவணங்களும் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் நிரூபண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்து

இருப்பேன் என்றால் சரியல்ல. வாதி திருக்கோவில் பகுதியில் அமைந்திருக்கக் கூடிய எத்தனை வாடகைதாரர்களிடம் வாடகை வசூல் செய்து வருகிறார் என்று எனக்குத் தெரியாது. வாதி, மகேஷ் கண்ணன், கிருஷ்ணன், தனம், லெட்சுமி ஆகிய நபர்களிடம் இருந்து வாதி அங்காயி அம்மன் கோவில் சார்பாக வாடகை வசூலித்து ரசீது கொடுத்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த நபர்களிடம் வாடகை வசூல் செய்து வருகிறேனா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை பத்தி 4 ல் The finding in both the cases are that the defendant is the owner and got title to the suit property என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எனக்கு தீர்ப்பு விவரங்கள் தெரிந்த காரணத்தினால் தான் finding என்ற வார்த்தையை உபயோகப்படுத்தி இருக்கிறேன் என்றால் சரியல்ல. தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள சாராம்சங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், அதனால் தான் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் அவ்வாறு குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு தீர்ப்பு பகரப்பட்டு இருந்தால் அதில் தரப்பினராக இருக்கும் பட்சத்தில் அதில் சொல்லப்பட்டுள்ள சாராம்சத்தை படித்துப் பார்த்து தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதியின் வழக்கை பொத்தாம் பொதுவாக மறுத்து இருக்கிறோம் என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பு மற்றும் மின் கட்டண விவரங்களை ஆட்சேபனை செய்து நான் இந்த வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தினால் என்ன நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனக்கு முன்பு பணியில் இருந்த செயல் அலுவலர் நடவடிக்கை எடுத்தாரா என்று எனக்குத் தெரியாது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தால் அது தொடர்புடைய ஆவணங்களை தாக்கல் செய்து இருப்போம் என்றும், நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தான் ஆவணங்கள் தாக்கல்

VerdictumIn

செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை மனு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அங்காயி அம்மன் கோவில் பேரில் செல்லாண்டியம்மன் கோவில் திருக்கோவிலோடு சேர்த்து வருவாய் துறை பதிவுகளை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. அந்தப் பதிவுகளை நீக்கம் செய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் காரணத்தினால் மேற்கொள்ளவில்லை. எனக்கு முன்பு பணியில் இருந்த செயல் அலுவலர் அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொண்டாரா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் அது தொடர்புடைய ஆவணங்கள் கைவசம் இருக்கும் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. முந்தைய வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புகளுக்கு விரோதமாக தற்போது சில வாடகைதாரர்களிடம் இருந்து நான் வாடகை வசூலிக்க முயன்று வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் இருக்கக்கூடிய 42 வாடகைதாரர்களும் திருக்கோவிலின் வாடகைதாரர்கள் என்பது எங்கள் தரப்பு வாதமாகும். வாதி அசல் வழக்கு எண்.58/1977 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் அடிப்படையில் தற்போதைய வழக்கை தாக்கல் செய்து இருப்பதால் வாதி கேட்கக்கூடிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் சொத்து விவரத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் 13.12.2001 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பி.வா.சா.ஆ.1 ல் முந்தைய வழக்கு நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. பி.வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் முழுவதுமாக செல்லாண்டி அம்மன் திருக்கோவிலுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பது எங்கள் தரப்பு வாதம் ஆகும்.

வாதியின் அனுபவத்தில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிர் கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆகிய அறிவிப்பு கடந்த 29.07.2022 அன்று முந்தைய செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe